## மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்
## 2013 ஆகஸ்ட் மாதம் 06 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு

### நிகழ்ச்சி நிரல்

I. தவிசாளரின் அறிவிப்புக்கள்

II. அறிக்கைகளையும், ஆவணங்களையும் சமர்ப்பித்தல்

III. செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

IV. மனுக்கள்

V. கேள்விகள்

01. **கௌரவ உதேன விஜேரத்ன உறுப்பினர் அவர்களினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு அமைச்சரிடம்** 2013.07.23 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/V** (1)13/10)

அ. மீரிகம டட்லி சேனாநாயக்க மாதிரி கணிஷ்ட பாடசாலைக்கு முதலாம் தரத்திற்கு ஆட்சேர்க்கும் போது தேவையற்ற நிர்ப்பந்தம் நிகழ்ந்துள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. ஆட்சேர்த்துக் கொள்ளும் நேர்முகப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட 33 பிள்ளைகளும், மேன் முறையீட்டினூடாக 02 பிள்ளைகளும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் பிள்ளைகள் 07 பேர் உள்ளடங்களாக 42 பேர் என்ற அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் என்பதனை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

இ. வகுப்பில் 45 பேரை பூர்த்தி செய்வதற்கு மிகுதியாக உள்ளவர்களில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்டதன் கீழா அல்லது வேறு முறையின் மூலமா சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் ?

ஈ. அப் பாடசாலையில் ஆரம்பத்தில் ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் காணப்பட்ட 13 வெற்றிடங்களில் மாகாண கல்வித் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட இரண்டு பட்டியல்களில் இருந்து 09 பிள்ளைகள் எவ்வாறு ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர் ?

உ. பாடசாலையின் முதலாவது தரத்திற்கு பிள்ளைகளை ஆட்சேர்க்கும் போது அதிக புள்ளிகள் மற்றும் காத்திருக்கும் பட்டியளினுள் உள்ளடக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் புள்ளிகளின் எண்ணிக்கையை குறிப்பிடுவீர்களா ?

ஊ. அப்பிள்ளைகளின் பெயர்கள் நேர்முகப் பரீட்சைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதா, இல்லையா ?

எ. அதிக புள்ளிகள் என்ற அடிப்படைக்குப் புறம்பாக செயற்படுவது பிள்ளைகளுக்கு மேற்கொள்ளும் அநீதி ஒன்று அல்லவா ?

ஏ. அந்த அநீதி தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது ?

ஐ. இதன் கீழ் தவறு செய்தவர்களுக்கு சட்ட ரீதியாக தண்டனை வழங்க நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஒ. அநீதிக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு நீதியை வழங்குவீர்களா ?

02. **கௌரவ யூ.ஜோர்ஜ் பெரேரா எதிர்க்கட்சியின் பிரதான ஏற்பாட்டாளரினால் கௌரவ போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கை, கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2013.07.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/v (1)13/11)**

அ. களனி பொதுச் சபை கூட்டுறவுச் சங்கம் தொடர்ச்சியாக 06 வருட காலம் தேர்தலை நடத்தாது கூட்டுறவு ஆணையாளரினால் பெயரிடப்பட்ட தவிசாளரின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள தவிசாளர் இச் சங்கத்தின் அங்கத்தவர் இல்லை என்பதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

இ. அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

ஈ. இத் தவிசாளரின் கீழ் கூட்டுறவுச் சங்கத்தில் பாரிய அளவு நிதி மோசடி நிகழ்ந்துள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

உ. தற்போது பல்வேறுபட்ட நபர்கள் மற்றும் இயக்கங்களினூடாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஊழல் மோசடி தொடர்பாக அரசியல் செல்வாக்கின் காரணமாகவே நடவடிக்கை எடுக்கவில்லை என்பதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

ஊ. நாளுக்கு நாள் அழிவுக்கு உட்படும் கூட்டுறவுச் சங்கத்தை பாதுகாப்பதற்கு அமைச்சர் என்ற வகையில் நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

எ. இல்லையாயின் ஏன் ?

ஏ. 06 வருடகாலமாக இச் சங்கத்துக்காக ஏன் தேர்தல் நடத்தவில்லை ?

ஐ. எதிர்காலத்திலாவது தேர்தல் ஒன்றை நடத்துவீர்களா ? அப்படியாயின் எப்போது?

03. **கௌரவ யூ.ஜோர்ஜ் பெரேரா எதிர்க்கட்சியின் பிரதான ஏற்பாட்டாளரினால் கௌரவ போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கை, கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு : (கே/v (1)13/12)**

அ. அத்தனகல்ல பொதுச் சபைக் கூட்டுறவுச் சங்கத்தின் தவிசாளர் கம்பஹா மாவட்ட கிராமிய வங்கி சங்கத்தின் பணிப்பாளர் என்பதனை நீங்கள் அறிவீர்களா?

ஆ. இதன் காரணமாக கூட்டுறவு சபையானது வருடாந்தம் 16.25% வட்டி ஒன்றினை பெற்றுக் கொடுப்பதாக அறிவித்திருந்த போதும் சங்கத்துக்கு உரிய நிதி கம்பஹ மாவட்டத்தின் கூட்டுறவு கிராமிய வங்கியில் ரூபா 375 இலட்சம் 15.25% வட்டிக்கும் கொழும்பு கிராமிய வங்கிச் சங்கத்தில் ரூபா 150 இலட்சம் நிதி ரூபா 16% வட்டிக்கும் வைப்பில் இடப்பட்டு சங்கத்துக்கு வருடாந்தம் ரூபா 412,500/- வட்டி இல்லாமல் போய் உள்ளதனை அறிவீர்களா ?

இ. 2012ஆம் ஆண்டு தவிசாளரின் விருப்பத்தின் படி கம்பஹா மாவட்ட வங்கிச் சங்கத்தில் வைப்பில் இடப்பட்ட நிதி பணிப்பாளர் சபையின் முடிவிற்கு இணங்க இலங்கை தேசிய கூட்டுறவு சபையில் வைப்பில் இடப்பட்டதனால் ரூ. 468750/- மேலதிக வட்டியொன்று கிடைக்கப்பெற்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. சங்கத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் கூட்டுறவு மருந்தகத்துக்கு பெற்றுக் கொள்ளப்படும் மருந்துகளுக்காக கிடைக்கப் பெறும் கழிவு நிதியை தவிசாளர் தனிப்பட்ட ரீதியில் பெறுகின்றார் என்பதனை அறிவீர்களா ?

உ. சங்கத்தின் பாவனையாளர் பிரிவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 15 இலட்சம் நிதி நட்டம் ஏற்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா?

ஊ. இந்த ஊழல் மற்றும் மோசடிக்கு எதிராக சங்கத்தின் உப தவிசாளர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையின் மூன்று அங்கத்தவர்கள் 2013.06.20 ஆந் திகதி தொடக்கம் பதவிகளில் இருந்து இராஜிநாமா செய்துள்ளனர் என்பதனை அறிவீர்களா ?

எ. தவிசாளரின் முறைகேடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

04. **கௌரவ நிரோஷன் பாதுக்க உறுப்பினரினால் கௌரவ விவசாயம், கமத்தொழில் அபிவிருத்தி, சிறு நீர்ப்பாசனம், கைத்தொழில், சுற்றாடல் அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(கே/v (1)13/13)**

அ. பிலியந்தலை நகரில் நடைபெற்ற மரவெள்ளி தான சாலை மற்றும் பாதுகாப்பு படையின் உபகார வைபவத்திற்காக உங்கள் அமைச்சினால் எவ்வளவு செலவு செய்யப்பட்டது ?

ஆ. எவ்விடயத்திற்காக செலவு செய்யப்பட்டது ?

இ. "கருணா சமாதி நிதியம்" மற்றும் உங்களது அமைச்சுக்கு இடையே காணப்படும் தொடர்பு யாது ?

ஈ. அந்த "சமாதி நிதியத்தின்" பிரதான உத்தியோகத்தர் யார் ?

உ. உங்களது அமைச்சு மற்றும் "கருணா சமாதி நிதியத்திற்கு" இடையே உடன்படிக்கை ஒன்று காணப்படுகின்றதா?

ஊ. இந்த தான சாலை தொடர்பான பத்திரிகை தகவல்களுக்கு இணங்க 2.2 டொன் மரவெள்ளிக் கிழங்குகள் பகிர்ந்தளிக்கப்பட்டதா ?

எ. இல்லையாயின் அது எவ்வளவு ?

VI. **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

VII. **அமைச்சுக்களின் அறிவிப்புக்களும் / அமைச்சர்களின் தகவல்களும்**

VIII. **தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்**

IX. **தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்**

01. **கௌரவ சிறிகமல் பிலீஷியன் த சில்வா உறுப்பினர்**

*இலங்கையானது சுதந்திரக் கல்வி நடைமுறையில் உள்ள நாடொன்று என தெரிவிக்கப்படுகின்றது, எனினும் நாட்டினுள் மத்திய அரசு, மாகாண சபை, தனியார், சர்வதேச என பாடசாலைகள் இயங்குகின்றன என்பதை நாங்கள் அறிவோம் இவற்றுள் பெரும்பாலான பாடசாலைகள் மாகாண சபைகளுக்கே உரியதாகின்றன இம் மாகாண சபைகள் வருடாந்தம் வரவு செலவு திட்டத்தின் மூலம் அதிகளவு நிதி கௌரவ முதலமைச்சர் அங்கத்துவம் பெறும் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்படுகின்றது எனினும் எங்கள் மாகாண பாடசாலைகளின் பராமரிப்புக்காக வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை என அதிகாரியினால் தெரிவிக்கப்படுவதன் காரணமாக பெற்றோர்கள் பழைய மாணவர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் வேறு பல்வேறுபட்ட முறைகளின் மூலம் பாடசாலைகளின் குறைபாடுகள் தீர்க்கப்படுகின்றன என்பது வெளிப்படையாகும் ஒழுங்கற்ற முறையில் இடம்பெறும் இந் நடவடிக்கையின் காரணமாக பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஏற்படும் கஷ்டத்தை தவிர்ப்பதற்காக ஒழுங்கான முறை ஒன்றினை விரைவாக தயாரிக்க வேண்டும் என இந்த மேல் மாகாண மாகாண சபை எண்ணுகிறது.*

(பி/v (01)13/02)

02. **கௌரவ லலித் எல்லாவல உறுப்பினர்**

*"தற்போது காணப்படும் மாகாண சபை மற்றும் பாராளுமன்ற விகிதாசார தேர்தல் முறையானது, போட்டியிடும் அபேட்சகர்கள் அதே போல் வாக்காளர்களுக்கு மிகவும் கஷ்டமான தேர்தல் முறையொன்று ஆகியபடியால் எதிர்காலத்தில் நடைபெறும் எல்லா தேர்தல்களையும், புதிய உள்ளூராட்சி முறையின் மூலமும், மாகாண சபையை தொகுதி அடிப்படையிலும், பாராளுமன்ற தேர்தலை தொகுதி அடிப்படையிலும் நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது."* (பி/v (01)13/04)

## X. சபை ஒத்திவைப்பு பிரேரணை

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2013.07.23 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா.)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, B அலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.